

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில், ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி சிறப்பு உரையாற்றினார். உடன் கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ., கழக செய்தி தொடர்பாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா உட்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# மாநில உரிமைகளை கட்டிக் காக்கும் இயக்கம் தி.மு.கழகம்!

## திண்டுக்கல்லில் – அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், மே.17-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.கழக இளைஞர் அணி சார்பில் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இந்தித் திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தாடிக்கொம்பு அகரம் பேரூராட்சி பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம் எல்ஏ தலைமை தாங்கினார். இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் கணேசன் அனைவரையும் வரவேற்றார்.

இதில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி கலந்துகொண்டு பேசுகையில், “தாய் மொழி தமிழை யாராலும் அழிக்க முடியாது.

தமிழ்நாட்டில் இந்தி மொழியை திணிப்பதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். தமிழ்நாட்டில் தமிழ் மொழி தான் ஆட்சி மொழியாக இருக்கும். தமிழ்நாடு தன் உரிமைகளுக்காக எப்பொழுதும் போராடும் அதில் வெல்லும்.

மாநில உரிமைகளை கட்டிக்காக்கும் இயக்கமாக கழகம் உள்ளது. அதற்காக தொடர்ந்து போராடி வருகிறது” என்றார்.

பின்னர் தலைமைக்கழக பேச்சாளர் தமிழன் பிரசன்னா பேசினார். மாநில இளைஞரணி பொதுச் செயலாளர் ஆனந்தகுமார் கழக இளம் பேச்சாளர் செல்வகுமார் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, துணைச்செயலாளர்கள் மார்கரெட் மேரி, பிலால் உசேன், நாகராஜன் பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் தண்டபாணி அகரம் பேரூராட்சி முன்னாள் தலைவர் நந்த கோபால் பேரூராட்சி முன்னாள் தலைவர் கவிதா சின்ன தம்பி, ரெட்டியார் சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவ குருசாமி, ஆத்தூர் மேற்கு ராமன் ஆத்தூர் கிழக்கு முருகேசன் வடக்கு ஒன்றிய மணி,திண்டுக்கல் வடக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தெற்கு ஒன்றிய வெள்ளிமலை, அகரம் பேரூராட்சி தலைவர் நந்த கோபால் தாடிக்கொம்பு பேரூ ராட்சி தலைவர் கவிதா சின்ன தம்பி, விவசாய அணி இல கண்ணன் இலக்கிய அணி முருகானந்தம் , இளைஞர் அணி ராஜேஷ் பெருமாள் மாணவரணி ரவிசங்கர் உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் .

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் – சென்னை மாநகராட்சி சார்பில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆலோசனை!

# திரு.வி.க. நகர் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்!

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. எடுத்துரைத்து உரையாற்றினார்!

சென்னை, மே 17 -

சென்னை மாநகராட்சி சார்பில் 14.05.2025 மாலை 5 மணிக்கு ரிப்பன் மாளிகை 2வது தளத்தில் கூட்டரங்கில், சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் மாநகராட்சி மேயர், பிரியா ராஜன், மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் சென்னை மாவட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து மாநகராட்சி துணை ஆணையர்கள், அனைத்து மண்டல மண்டல அலுவலர்கள், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாகவும், கடந்த 24.10.2024 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அம்மா மாளிகையில் நடைபெற்ற அனைத்து மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பட்டியல் வழங்கப்பட்டது.

அதில், திரு.வி.க சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி வார்டு எண் 71ல் நெல்வயல் சாலை, பெரம்பூர் நெடுஞ்சாலை தெற்கு, வார்டு 72ல் வெங்கடேசபுரம் நியூ காலனி பிரதான சாலை, தாஸ் நகர் மெயின் ரோடு, வார்டு 73ல் இராமசாமி தெரு, நாச்சாரம்மாள் தெரு, வார்டு 74ல் கிருஷ்ணதாஸ் சாலை, சந்திரயோகி சமாதி சாலை, நேரு ஜோதி நகர், கொன்னூர் நெடுஞ்சாலை, வார்டு 75ல் மேடவாக்கம் குளக்கரை சாலை ஆகிய இடங்கிளில் பழைய பழதடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகால் கால்வாய்களை இடித்து அப்புறப்படுத்தி, புதிதாக மழைநீர் வடிகால் கால்வாய்களை அமைக்கவும்,

கடந்த மழையில் கால்வாய் கட்டப்பட்டும், இரண்டு நாட்கள் மழைநீர் நின்ற இடங்களான வார்டு 72ல் தாஸ் நகர் 7வது மற்றும் 8வது தெரு, வார்டு 74ல் கிருஷ்ணதாஸ் சாலை, சந்திர யோகி சமாதி சாலை, நேரு ஜோதி நகர், கொன்னூர் நெடுஞ்சாலை, வார்டு 76ல் அங்காளம்மன் கோவில் தெரு, கே.எம் கார்டன், நியூ பெரான்ஸ் சாலை ஆகிய பகுதிகளை சீரமைக்கவும், காந்தி கால்வாயின் பக்கசுவர் மற்றும் அடிதளம் ஆகியவற்றை சீரமைக்கவும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள் பின்வருமாறு.

வார்டு 72ல் உள்ள பிரதான சாலையான வெங்கடேசபுரம் நியூ காலனி மெயின் ரோடு, தாஸ் நகர் பிரதான சாலை மற்றும் கன்னிகாபுரம் விளையாட்டு மைதானம் உட்பகுதியில் வார்டு 73ல் இராமசாமி தெரு, நாச்சாரம்மாள் சந்து ஆகிய தெருக்களில் புதிய மழைநீர்வடிகால்வாய் மற்றும் பழைய மழை நீர்வடி கால்வாய் இடித்துக் கட்டும் பணிக்கு ரூ. 476. இலட்ச மதிப்பீட்டிற்கு 06.05.2025 அன்று ஒப்பம் கோரப்பட்டுள்ளது என்றும், வார்டு 71 மற்றும் 73ல் நெல்வயல் ரோடு, வீராசாமி தெரு ஆகிய தெருக்களில் மழைநீர்வடிகால்வாய் இடித்து கட்டும் பணிக்கு ரூ.402.30 இலட்சங்களுக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது என்றும், பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) இடித்து கட்டும் பணிக்கு ரூ.459.36 இலட்சத்திற்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது என்றும், மேலும் வார்டு எண் 75ல் மேடவாக்கம் குளக்கரை சாலையில் ரூ.340.15 இலட்சம் மற்றும் ரூ.234.91 இலட்சத்திற்கு கால்வாயை இடித்து கட்டும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால்வாய்களில் உடன் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒரு மூடிக்கும் அடுத்த மூடிக்கும் இடையில் உள்ள அடைப்புகள் மற்றும்சில்ட்கள்முழுமையாக மழைக்கு முன்னதாக அகற்றப்பட வேண்டும் என்ற சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி கோரிக்கை விடுத்ததற்கு, ஒவ்வொரு வருடமும் வடகிழக்கு பருவ மழைகாலம் மற்றும் தென்மேற்கு பருவ மழை காலங்களுக்கு முன்கூட்டியே திட்டமிட்டு ஒவ்வொரு வார்டிலும் உள்ள மழைநீர் கால்வாய்களில் தூர்வார அந்தந்த வார்டு பொறியாளர் மூலம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பம் கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்படும் நடைமுறையில் உள்ளது என்றும் காந்தி கால்வாயில் பக்கசுவர் மற்றும் அடித்தளம் அமைக்க ரூ.3.00 கோடி மதிப்பில் பணி மேற்கொள்ள 05.05.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் துறை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

மழையின்போது பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்படும் Relief Centres அந்தந்த வார்டிலேயே இருக்கும்படி அமைக்கப்பட வேண்டும் என்ற திரு. வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்களின் கோரிக்கைக்கு, மழைக்காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்க அந்தந்த வார்டுகளில் சமுதாய நலக்கூடங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள் தற்காலிக நிவாரண மையமாக பயன்படுத்தப்படும் என்றும், திரு.வி.க நகர் தொகுதியில் 9 சமுதாய நலக்கூடங்களும் 16 பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளும், மற்றும் ஆதி திராவிடர் பள்ளிகளும் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரம், 18 வது வார்டு, கிழக்கு சண்முகபுரம், எம்.எஸ்.கார்கடன் பகுதியில், புதிய மின்மாற்றினை இயக்கி வைத்தார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மேற்பார்வை பொறியாளர் நாகராஜ் குமார், செயற் பொறியாளர் நாகராஜ், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு நகர்மன்ற உறுப்பினர் சசிரேகா பிரபு, உதவி செயற் பொறியாளர் சுரேஷ்குமார், இளம் மின் பொறியாளர் ரவீந்திரன், வார்டு செயலாளர் பிரபு, எம்.சி.ராம், பிரதிநிதிகள் சீனுவாசன், நாகராஜ், துணை செயலாளர்கள் பிரபாகரன், ஆப்ரஹாம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூரில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகியை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சந்தித்து, சகியின் சகோதரர் தி.அ.முகமது சாதிக் மறைவெய்தியதையொட்டி ஆறுதல் தெரிவித்தார். மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. உடனுள்ளார்.

## சிவகங்கை மாவட்டம்:

# திருப்பத்தூரில் புதியதாக நியமிக்கப்பட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை!

சிவகங்கை. மே 17 -

சிவகங்கை மாவட்ட இளைஞரணி சார்பில் திருப்பத்தூர் தனியார் மண்டபத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, நகர ,பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் .பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி. பி .ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார் வரவேற்று பேசினார். கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ மாவட்ட கழக துணை செயலாளர் த. சேங்கைமாறன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் எழுத்தாளர் கோவி.லெனில் அன்பகம் வலைதள பயிற்சியாளர் இளமாறன் ஆகியோர் புதிதாக நியக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் , துணைஅமைப்பாளர்களுக்கு பயிற்சிகளை அளித்தார்கள். இந்த கூட்டத்திற்கு தலைமை வகித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

இளைஞர் அணியில் புதிதாக பொறுப்பேற்றுள்ளவர் கள் திட்டமிட்டு பணிகளை செய்திட வேண்டும் .திட்டமிட்ட நேரத்தில் கூட்டத்தினை நடத்திட வேண்டும். குறித்த நேரத்தில் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும். கழகத்தில் உள்ள 23 அணிகளின் முதன்மையான அணி இளைஞர் அணி ஆகும். கழக தலைவர் கலைஞர் அவர்களால் தளபதி அவர்கள் தலைமையில் துவக்கப்பட்ட இந்த இளைஞரணி முதன்மையான இடத்தை பெறுவதற்கு பல்வேறு வகையில் அவரது உழைப்பினால் உருவானது.அதற்காக கடுமையாக உழைத்து பல்வேறு வகையில் இந்த இளைஞரணியை வளர்த்து 23அணிகளில் முதன்மையான அணி என்றஇடத்தினை பெற்றுள்ளார்.

தளபதி அவர்கள் கழகத் தலைவராக பொறுப்பேற்றதும் உலகமே உற்று நோக்கும் வகையில் கழகம் செயல்பட்டு வருகின்றது. அவரது வழியில் துணை முதல்வர் இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்று இயக்கத்தினை தொய்வின்றி வலிமையுடன் நடத்தி வருகிறா.ர் எனவே இளைஞர் அணி என்பது கழகத்திற்கு வலு சேர்க்கும் அணியாக அமைந்துள்ளது .இன்று பொறுப்பேற்றுள்ள ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஒற்றுமை உணர்வுடன் செயல்பட வேண்டும்.

கழக அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். தினசரி 10 நபர்களையாவது சந்திக்க வேண்டும். அதிக அளவில் இளைஞர் அணி உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் .அடுத்த ஆண்டு 2026 ல் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது .அதில்200இடங்களில் கழகம் வெற்றி பெற வேண்டும் என்று அறிவித்துள்ளார்.

நாம் நாடாளுமன்ற தேர்தலின் பொழுதே சட்டமன்றத் தேர்தல் பணியினை துவங்கி விட்டோம் .நமது கூட்டணி ஒரு வலுவான கொள்கை ரீதியான கூட்டணிஆகும். கழகத் தலைவர் முதல்வர்தளபதி அமைத்துள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆகும்.

ஆனால் இன்று புதிதாக சேர்ந்துள்ள அ.தி.மு.க. பா.ஜ.க கூட்டணி ஒற்றுமை இல்லாத கூட்டணி. நிர்பந்தத்தின் பெயரால் கூட்டணி ஏற்பட்டுள்ளது. அவர்களிடம் எவ்வித வலிமையும்இல்லை . ஆனால் பலம் உள்ளது போல் காண்பித்துக் கொள்கிறார்கள்.தன் மீது ஏற்படும் வழக்குகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ளவே இத்தகைய கூட்டணி அமைந்துள்ளது.

ஜெயலலிதா 2014 தேர்தலில் மோடியா லேடியா என்று மோடியை எதிர்த்தார்.ஆனால் அம்மா வழியில் இயக்கத்தை நடத்துவதாக கூறிக் கொள்பவர்கள் அம்மாவின் புகழுக்கு களங்கம் ஏற்படும் வகையில் கூட்டணியை உருவாக்கியுள்ளார்கள் .அதை மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

கழக தலைவர் தளபதி அவர்கள் எத்தகைய சூழ்நிலையிலும் ,எந்த நிலையிலும், எத்தகைய அடக்குமுறை வந்தாலும் அஞ்சாமல் எதிர்த்து நிற்கும் என்றுதலைவர் அவர்கள் பிரகடனம் செய்துள்ளார் .அதை நாம் நிறைவேற்றிடும் வகையில் நமது பணிகள் அமைந்திட வேண்டும் .இளைஞரணி முதன்மை அணி என்பது தொடர வேண்டும் . தலைமை உங்களை அரவணைத்து ஆதரிக்க தயாராக உள்ளது .எனவே அதற்கு ஏற்ப இளைஞர்களின் செயல்பாடுகள் பணிகள் அமைந்திட வேண்டும்.1980ல், மதுரையில் நடைபெற்ற இளைஞர் அணி மாநாடு பேரணியில் சிவகங்கை மாவட்டம் மாநிலத்தில் இரண்டாவது இடத்தை பெற்றது.

அத்தகைய பெருமையினை சிவகங்கை மாவட்ட இளைஞரணி பெற்றுள்ளது. அதேபோல் தற்போது பொறுப்புக்கு வந்துள்ள இளைஞர் அணியினரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். தலைமையிடு ம் கட்டளைகளை பொறுப்புணர்வு டன் நிறைவேற்ற பாடுபட வேண்டும். அந்த கட்டளைகளை செயல்படுத்த வேண்டும் நம்முடைய பணிகள் எதிர்காலத்திற்கு அடித்தளமாக அமையும்.

இளைஞர்களுக்குள் நல்ல பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும் .இயக்க வரலாறுகளை இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் .கடந்த நான்காண்டு கால அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் கூற வேண்டும். இந்த இயக்கத்திற்கென்று ஒரு வரலாறுஉள்ளது. மொழி,இனம் பண்பாடு ஆகிய வற்றை பாதுகாக்கும் இயக்கமாக இந்த இயக்கம் அமைந்துள்ளது.

நமது இயக்கத்திற்கு உள்ள வரலாறு மற்ற எந்த இயக்கத்திற்கும் கிடையாது.பலவித சோதனைகளை கடந்து நமது இயக்கம் 75 ஆண்டுகள் தாண்டி உள்ளது. பவளவிழாவினை கண்டுள்ளது. எத்தனையோகட்சிகள் வரலாம். போகலாம். நமது நாட்டின் அரணாக காவலராக தளபதி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

பேரறிஞர் அண்ணாவால் துவக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்ட இயக்கம் ஆகும். இன்று மூதல்வர் தளபதி அவர்களின் தலைமையில் இந்தியாவே உற்றுநோக்கும் வகையில் அவரது செயல்பாடுகள் அமைந்துள்ளது அத்தகைய செயல்பாடுகள் தொடரவேண்டும் . அதற்கு அனைத்து விதமான ஒத்துழைப்பினை நாம் நல்கிடவேண்டும். அதற்கு அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும்.

கழகம் இருந்தால்தான் நமது வாழ்வு சிறப்பாக அமையும் . அதற்கு ஏற்ப நமது பணிகள் அமைய மனப்பூர்வமாக அமைந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர். சேதுபதி ராஜா ,கார்த்தி , பரணி கிட்டு, கே .எம் .பொற்கோ ,எஸ் .எம் .மதிவாணர் ,மகாதீர் ,ஒன்றிய செயலாளர் கள் வே.தமிழ்மாறன், சுப்பிரமணியன், பேரூர் கழகசெயலாளர் ஆர் .கார்த்திகேயன் , ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன் , ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார், அவைத் தலைவர் ராம. ரவி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் , உதயம்சண்முகம், சுப்பிரமணியன் மாவட்ட பிரதிநிதி சேவியர் ,மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் “நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு” எனும் திராவிட மாடல் அரசின் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், தொட்டியம் ஊராட்சி மந்தைவெளி பகுதியில், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் தலைமையில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் காசி.விஸ்வநாதன் கலந்து கொண்டு நான்கு ஆண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடையே எடுத்துரைத்து பேசினார், முன்னதாக இந்த பொதுக் கூட்டத்தில் சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அன்புமணிமாறன், ஒன்றிய கழக துணை செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். கிளை கழக செயலாளர் செல்வராசு நன்றியுரை கூறினார்.